செ.வெ.எண் : நாள் : 09.09.16

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலர் அவர்களின் கடித அறிவுரையின்படி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2016-க்கான வரைவு வாக்குச்சாவடி அமைத்தல் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்.இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் இன்று (09.09.16) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர். வாக்குச் சாவடி மாற்றி அமைத்தல், குறித்த கருத்துருவினை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் மனுவாக அளிக்கும்படியும், அதன் பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் 2109, நகராட்சியில் 160, பேரூராட்சிகளில் 450 மொத்தம் 2719 வரைவு வாக்குச்சாவடிகளாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, தேர்தல் நடத்தும் அலுவலரால் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச் சாவடிகளும் விதிகளின்படி பொது மக்கள் செல்லக் கூடிய தூரத்திலேயே அமைந்துள்ளன. ஆட்சேபனைகள், கருத்துரைகள் இருப்பின் பரிசீலித்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 14.09.2016 அன்று இறுதி வாக்குச் சாவடி பட்டியல் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரால் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.சதீஸ்பாபு உட்பட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், நகராட்சி பொறியாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**